**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Issue - 1, November 2022** **E-ISSN: 2583-0481**

# Dreadful Palai Land

**M. Revathi,** Research Scholar of Tamil, Bharathidasan University, Trichy, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3430-3339**
**Dr. A. Govindarajan,** Assistant Professor of Tamil, Bharathidasan University, Trichy, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-1237-8962**
**DOI: 10.5281/zenodo.7438039**
**Received:** 29 August 2022; **Revised:** 15 September **Accepted:** 30 September 2022; **Available online:** 26 November 2022.

## Abstract

*This article is based on the Dreadful Palai Land which has a desert-like structure of ancient Tamil Nadu. It examines the ideas of the Palai land mentioned by Tolkappiyar and the opinions of other Tamil authors. The views of the commentators and the views of Sangam authors are also examined that Palai land will be formed by combining Kurinji and Mullai when it had been destroyed. From ancient Tamil Nadu to today's Tamil Nadu, there was no permanent land called Palai land. It is also known that fertile land areas are changing their nature and turning into deserts due to the scorching Sun, water crisis and other ecocritical issues. Palai songs can be used to describe the extent to which the desert has become a land of terror due to the lack of basic needs. It is known that wayfarers are threatened by animals and subjected to persecution like killing and robbery by the bandits of the area. Such ideas can be found in Palai Thani songs. Hence, this article elicits the facts of Palai Land from authentic sources.*

**Keywords:** Dready, Palai (desert), Land.

## References

[1] Ilampuranar Urai. *Tholkappiyam*, *Porulathikaram*. Sarada Pathipagam, Chennai-600005, 2005.
[2] S. V. Subramanian. *Sanga Ilakkiyam. Ettuthogai Moolamum Uraiyum*. Manivaskar Pathipagam, Chennai-600108, 2010.
[3] V. Suba. Manickam. *Tamil Kadal*. Meiyappan Pathipagam, Chidambaram-608001, 2005.
[4] Ka.Su.Pillai. *Palandamizhar Nagarigam allathu Tholkappiya Porulathikara Karuthu, Mopporul Vilakkam*. Edition – 2006.
[5] C. Balasubramanian. *Ilalliya Anigal*. Edition – 1962.
[6] Ilango Adigal. *Silappathikaram*. Indu Publishers, Madurai.

**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# அச்சுறுத்தும் பாலை நிலம்

**மா. ரேவதி**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி – 24, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-3430-3339**
**முனைவர் அ. கோவிந்தராஜன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி-24, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-1237-8962**
**DOI: 10.5281/zenodo.7438039**

**ஆய்வுச்சுருக்கம்**

*'அச்சுறுத்தும் பாலை நிலம்' எனும் பொருண்மையில் அமைந்த இக்கட்டுரையில் பாலை நிலத்தின் நில அமைப்பு முறை, பாலை உருவாகும் விதம், தொல்காப்பியர் குறிப்பிடும் பாலை நிலம் பற்றிய கருத்துக்கள், பிற உரை ஆசிரியர்களின் கருத்துக்கள் ஆகியவை ஆராயப்படுகின்றது. குறிஞ்சியும் முல்லையும் திரிந்தே பாலை நிலம் உருவாகும் என்று உரையாசிரியர்கள் குறிப்பிடும் கருத்துகள் மற்றும் சங்க நூலாசிரியர்களின் கருத்துக்கள் ஆகியவையும் ஆராயப்படுகின்றது. இங்கு பண்டைய தமிழகம் முதல் இன்றைய தமிழகம் வரையிலும் பாலை நில அமைப்பு என்ற நிரந்தர நிலம் இருந்தது இல்லை. வளமான நிலப் பகுதிகள் தம் இயல்பினில் மாறி பாலையாக மாறுகிறது என்ற செய்தியும் அறிய முடிகிறது. அடிப்படைத் தேவைகள் நிறைவடையாதக் காரணத்;தால் பாலைநிலம் அச்சமூட்டும் நிலமாக மாறியுள்ளத் திறத்தைப் பாலை பாடல்கள் வழி அறியலாம். விலங்குகளால் வழிப் போக்கர்கள் அச்சுறுத்தப்படுவதும் பாலை நில மாந்தர்களால் கொலை, கொள்ளை போன்ற துன்புறுத்தல்களுக்கு ஆட்படுவதும் அறிய முடிகிறது. இது போன்ற கருத்துக்கள் பாலைத் திணைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.*

**திறவுச்சொற்கள்**: அச்சம், பாலை, நிலம்.

**முன்னுரை**

தொல்காப்பியர் காலத்தில் இலக்கிய அடிப்படையாக அகம், புறம் போன்ற இருநிலையில் இலக்கியங்கள் அமைந்துள்ளன. தொல்காப்பியருக்கு பிற்பட்ட காலத்தில் பல வகையான அற நூல்களும் பிற நூல்களும் எழுந்தன. மன வாழ்க்;கையும், மனை வாழ்க்கையும் அக வாழ்க்கையாக அமைகின்றன. இவ்வாறு அமைக்கப்பட்ட அக நூல்கள் யாவும் ஐந்து திணைகளாக இயற்றப்பட்டு தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வைந்து திணைகளுக்கும் தனித்தனியே அவற்றின் நிலத் தன்மைக்கேற்ப நிலம் வகுக்கப்பட்டு அவ்வந் நிலத்;தின் தன்மைகள் அப்பாடல்களில் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு காணப்படும் பாலை நிலத்தன் மை மற்றும் பாலை நிலம் உருவாகும் விதம் ஆகியவை குறித்து தொல்காப்பியர்

கூறும் மற்றும் பிற உரையாசிரியர்கள் கருத்துப்படி விளக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் பொருளாக சிலப்பதிகாரத்தின் பாலை நில பகுப்பு முறை விளக்கப்பட்டுள்ளது. ஐந்திணைகளில் நடுவனதாக பாலை நிலம் தொல்காப்பியரால் குறிப்பிடப்படுகிறது. பின்னர் வந்த நூல் ஆசிரியர்கள் குறிஞ்சியும் முல்லையும் இயல்பினில் திரிந்து பாலையாக மாறுகிறது என்று விளக்குகின்றனர். பாலை நிலம் தமிழகத்தில் இல்லை என்றும் இதன் வழி தொல்காப்பியர் பாலைக்கு நிலம் வகுக்கவில்லை என்றும் உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பாலை என்பது வறண்ட நீரற்ற சுரம் என்பது இதன் வழி அறிய முடிகிறது.

நில அடிப்படை

உலகம் நானில அடிப்படையில் தான் திகழ்கிறது. நிலவியற்கைக் காட்சிகள் குறித்து செம்மையாக அறிந்து கொண்டாலன்றி சிறந்த இலக்கியம் படைக்க இயலாது. ஓங்குயர் தெருக்களும், ஒழுகும் அருவியும், எழிலோடு விளங்கும் மலையும், மரம் செடி கொடிகளும், மரங்களும் நிறைந்த காட்டுவளம் பொங்கும் மருத வயல்களும் நீர் அறாத பேராறுகளும் பொய்கையும் வாவியும் மிகுந்த வயலும் இவையாவும் இயற்கைப் புலவனின் பாடுந்தொழிலுக்கு முதற் தேவையாக அமைகின்றன. இத்திணை சார்ந்த அமைப்பினை தொல்காப்பியர் நான்கு வகை நிலங்களாக பாகுபடுத்திப் பாடியுள்ளார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கும் நான்கு திணைகளாக அதாவது நால்வகை நிலங்களாக பாகுபடுத்தியுள்ளார் தொல்காப்பியர்.

திணைகள்

**திணை எனும் சொல்லுக்கு நிலம் என்று பொருள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் மலர் பெயராலே அமைந்த அவ்விடங்களைத் திணை என்று அழைத்தனர் (பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பிய பொருளதிகார கருத்து, பக். 137)**

. இதனை ஒழுக்கத்திணை என்பாரும் நிலத்தினை என்பாரும் என இரு பகுதியர் ஆசிரியர் என்கிறார் நக்கீரர். தொல்காப்பியர் திணை என்ற சொல்லுக்கு நிலம், ஒழுக்கம் எனும் இரு பொருளையும் கொடுத்திருக்கின்றார்.

**பாலை நிலம்**

பாலையை நிலம் என்று தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என நால்வகைத் திணைக்கும் நிலம் வகுத்து பாலைக்குத் தனியே நிலம் வகுக்காமல் நடுவணைந்திணை என்று குறிப்பிட்டுள்ளார். இதனை,

**நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே. (தொல்.பொருள்.அகம்., நூ. 2)**

என்ற நூற்பா வாயிலாக விளக்கியுள்ளார். ஏனைய நான்கு திணைக்கும் வெளிப்படையாக நிலம் சுட்டியவாறு பாலைக்குத் தனி நிலத்தைத் தொல்காப்பியர் சுட்டிக் கூறவில்லை. ஆதலால்

பாலைக்குரிய நிலம் பிற நான்கு திணைகளுக்கும் உரிய நிலமே ஆகும் என்கின்றனர் உரையாசிரியர்கள்.

> **வ.சுப.மாணிக்கம் அவர்கள் பாலையைப் பற்றிக் குறிப்பிடும்போது தமிழ்கூறு நல்லுலகத்தின் வழங்கும் செய்யுளும் கொண்ட இலக்கணம் படைப்பதை வரம்பாகக் கொண்டமையால் தமிழகத்து எல்லைக்குள் தோன்றும் வேனிலை வரைந்தார். இல்லாத நிலப்பாலையை வகுக்காது விட்டார். நிலம்; வேண்டாது போகவே நிலத்துறையும் தெய்வமும்; வேண்டாதாயிற்று (தமிழ்க்காதல், பக்.150)**

என்று குறிப்பிட்டுள்ளார். பாலை நிலம் குறித்து அறிஞர் சிலர் கொண்ட கருத்துக்களும் இங்கு நோக்கத்தக்கவை. **மழையின்றி வளம் குறைந்த காடும் மலையும் கொண்ட பகுதி பாலை (இலக்கிய அணிகள், பக்.29)** என்று சான்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**சிலம்பு கூறும் பாலை**

செம்பொற் சிலம்பு எனும் சிறப்புடைய சிலப்பதிகாரம் முதன் முதலில் பாலைக்கென்று தனியே நிலம் வகுத்துக் கூறியுள்ளது. சிலப்பதிகாரத்தின் இரண்டாவது காண்டமாகிய மதுரைக் காண்டத்தில் காடுகாண் காதையில் பாலை நிலம் குறித்துக் குறிப்பிட்டுள்ளார் இளங்கோவடிகள். இதனை,

> **தானலந் திருகத் தன்மையிற் குன்றி,**
> **முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
> **நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
> **பாலை என்பதோர் படிவம் கொள்ளும். (சிலம்பு, மது.காண்., பா. 63:67)**

என்ற சிலப்பதிகார அடிகளால் அறியலாம். அதாவது வளமையான மலைப் பகுதியாகிய குறிஞ்சியும் காட்டைத் தன் நிலமாகக் கொண்ட முல்லையும் தன் இயல்பில் திரிந்த வடிவமே பாலை என்று மாற்றமடைவதாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். காப்பியங்கட்கு முற்பட்ட சங்க இலக்கிய நூல்களில் குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் தம் இயல்பில் திரிந்து இவ்வாறு மாற்றம் அடைவதை குறிப்பிட்டிருப்பது வியப்படைய வைக்கிறது.

**விலங்குகளின் அச்சுறுத்தல்**

வறண்ட பாலை நிலத்தில் வாழும் விலங்குகள் வழிப் போக்கர்களுக்கு மிகுந்த அச்சத்தைத் தரவல்லதாகும். பாலை நில விலங்காகிய புலிகள் வழிப்போக்கர்களின் தலையில் மோதியதால் புலிக்குட்டிகளின் தலையில் சிவப்புக் கறை படிந்துள்ளது. வாயெங்கும் இரத்தம் படிந்து காணப்படுகிறது. மாலை நேரத்தில் பெரிய தலையை உடைய புலிக்குட்டிகள் தாம் பதுங்கி இருக்கும் மரலின் தூருகளில் இருந்து நிமிர்ந்து பார்த்து அச்சமூட்டுகின்றன. இத்தன்மையினை,

> **அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்து,**
> **ஒலிவல் ஈந்தின் உலவைஅம் காட்டு,**

**ஆறுசெல் மாக்கள் சென்னி எறிந்த,**
**செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய**
**வல்லியப் பெருந்தலைக் குருளை மாலை,**
**மான்நோக்கு இண்டுஇவர் ஈங்கைய சுரனே (நற்., பா. 2:1-6)**

என்ற பெரும்பதுமனாரின் பாடலால் அறியலாம். மேலும் யானைகளால் உண்டாகும் அச்சத்தை,

**இடுநீறு ஆடிய கடுநடை ஒருத்தல்**
**ஆள்பெற நசைஇ நான்சுரம் விலங்கித்**
**துனைதரும் வம்பலர்க் காணாது, 'அச்சினம்**
**பனைக்கான்று ஆறும் பாழ்நாட்டு அத்தம் (மேலது. பா. 126:3-6)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. பாலை நிலத்தில் வழியிடை யானைகள் வருவோர் போவோரை கொல்வதற்காகத் திரிகின்றன. அவ்வாறு கொல்லக் கருதிய அளவில் அவ்வழியே எவரும் செல்லவில்லை ஆயின் தன்னுடைய சினத்தைப் பனை மரத்தில் மோதிப் பின்னர்; அடங்கித் திரியும். இது வழிப் போக்கர்களுக்கு மிகுந்த அச்சத்தை விளைவிக்கிறது.

**பாழ்பட்ட பாலை நிலம்**

எறும்புகள் துளைத்த குழிகளைப் போன்று சிறுசிறு சுனைகள் பலவற்றைக் கொண்ட பாறைவழியேப் பாலை நில வழியாகும். கொல்லனது உலைக்களத்தில் ஓங்கி அடிக்கப்படும் பட்டடைக்கல் எப்போதும் சூடாக இருக்கும். அது போல பாலை நிலப் பாறைகளும் எப்போதும் சூடாகவே இருக்கும். அவ்வாறு சூடான பாறைகளின் மீது ஏறி, வளைந்த வில்லையுடைய பாலைநில வேட்டுவர்கள் தங்கள் அம்புகளை நீட்டிக் கொண்டிருப்பர். அந்த இயல்பானது பல பிரிவுகளைக் கொண்ட கவர்த்த வழிகளை உடையது. பாலை நிலம் அச்சுறுத்தும் தன்மையினை,

**எறும்பி அளையின் குறும்பல் சுனைய**
**உலைக்கல் அன்ன பாறை ஏறி,**
**கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்**
**கவலைத்து என்ப(குறு., பா. 12:1-4)**

என்ற ஓதலாந்தையாரின் பாடலால் அறியலாம். மேலும் நிழல் அடங்கி மறைந்த வெறுமையானது பாலை நிலம். அக் கொடுமைகள் பலவற்றையும் தாங்கிக் கொண்டு கழல் அணிந்த தலைவன் காப்பான் என்று தலைவி உடன் செல்கிறாள். தலைவனுடன் தலைவி உடன்போக்கு சென்ற அப்பாலை நிலத்தில் நீர் அற்றுப்போன சுனையின் பக்கத்தில் உழன்று உவந்து வெந்து கிடக்கின்ற மிக வெப்பமானக் காலத்தில் கலங்கிய நீரை வேட்கையின் காரணத்தால் விரைந்து தலைவனும் தலைவியும் குடிக்க நேரிடும் என அஞ்சுகிறாள் செவிலி. குடிக்க சிறிதேனும் நீரில்லாத அளவிற்கு பாழ்பட்டுப் போனது பாலை நிலம் என்பதை,

**நிழல்ஆன்று அவிந்த நீர்இல் ஆர்இடைக்**
**கழலோன் காப்பக் கடுகுபு போகி**
**அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த**
**வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய (மேலது. பா. 356:1-4)**

என்ற கயமனாரின் பாடலால் அறியலாம்.

**நெருப்பை ஒத்த பாலை**

மரங்கள் பசுமையற்று வாடியிருக்கும் காரணத்தால் இங்கு கதிரவனின் கருணை சற்று அதிகமாகவே இருக்கறது. அதனால் சூரியனின் தாக்கம் அதிகரித்த காரணத்தால் பாலை மரங்கள் பாழ்பட்டுப் போயின. மரங்கள் பாழானதால் உயிரினங்களின் தேவைக்குக் கூட நிழல் இல்லாமல் போனது. இதனை,

**பைதற வெந்த பாலைவெங் காட்டு**
**அருஞ்சுரம் இறந்தோர் தேஎத்து (மேலது. பா. 326:1-4)**

என்ற பாடலால் அறியலாம். நெருப்பைக் கொட்டியது போன்ற வெப்பம் மிகுந்த நிழலே இல்லாத சுரத்தில் தங்கும் இடமின்றி இளமையான மான் தன் பிணை மானுடனும் குட்டியுடனும் வெயிலில் வருந்தி வாட ஒடுங்கிய நடைபாதையுடன் கூடியது காட்டுவழி. இது மிகவும் கொடுமையானது எனும் கருத்தினை,

**அழல்அவிர் நனந்தலை நிழல்இடம் பெறாது,**
**மடமான் அம்பினை மறியொடு திரங்க**
**நீர்மருங்கு அறுத்த நிரம்பா இயவின்**
**இன்னா மன்ற சுரமே (அகம்., பா. 285:1-8)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன. காட்டுத்தீ கவர்ந்து உண்ட, வெயில் மிகுந்த நீண்ட வழியிடத்தைக் கொண்டது பாலை நிலம். கள்ளிச் செடிகள் சூழ்ந்த பாலை நில வழியில் பன்றியைப் பார்த்திருக்கும் கொடிய பிளவுபட்ட வழிகளை உடைய பாலை நிலத்தைக் கடந்து வந்தது நெஞ்சம் என்றும் பாலைநில வழியின் தன்மை அறிய இயலுகிறது. புள்ளிகளையும் வரிகளையும் உடைய தன் நீண்ட பெரிய துதிக்கை நிலத்தில் தீண்டாத வண்ணம் நடந்து சென்றது என ஓதலாந்தையார் பாடியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கதாகும். கோடை வெப்பம் தங்கிய காட்டுவழி என்று பாலையைப் புலவர்கள் குறிப்பிடுகின்றனர்.

**கொலைக்களமானப் பாலை நிலம்**

சிறிதும் பசுமை நிறமின்றி காய்ந்து வறண்டது பாலை நிலம். உண்ண உணவும் தங்க நிழலும் இல்லாமல் போன காரணத்தால் வழிப்போக்கர்களை விலங்குகளும் மற்றும் பாலை நில மறவர்களும் கொல்லும் நிலை காணப்படுகிறது. இங்கு விலங்குகளும் பருந்து முதலிய பறவைகளும் இறந்தவர்களின் உடலை உண்பதற்கு ஆவலுடன் காத்து நிற்கின்றன என்ற செய்தி பாடல்களின் வாயிலாக அறிய முடிகிறது. யானைகள் உணவின்றி வருந்தும்

நிலையையும் காண முடிகிறது. வழிப் போக்கர்களைப் பாலை நில மறவர்கள் கொன்று குவித்த உடல்கள் யானைகளுக்கு நிழலாக அமையும் அளவிற்கு உயர்ந்திருக்கும் என்பதை அறியலாம். செந்தீப் போலச் சிவந்து வெம்மையுடன் விளங்கும் ஞாயிற்று மண்டிலம் விளை நிலங்களில் உள்ள பயிர்களில் தீய்ந்து ஒழிய அவற்றை எரித்து அழித்தது. அதனால் உலகம் வளம் கெட்டுக் குறைவுற்று மக்கள் நிலை பெயரும் காலமும் இதுதானோ என்று சொல்லும்படியாக உயிரினங்கள் வெப்பத்தால் மழை பெய்யாமல் போனதால் மடிந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய காட்டில் இலைகளே இல்லாத யா மரத்தின் கிளைகளில் வாழும் தம் குஞ்சுகளுக்குப் பாலை நிலப் பெரு வழியில் மறவர்களால் கொல்லப்பட்டு வீழ்ந்து கிடந்த மக்களின் கண்களைத் தோண்டி எடுத்து கழுகினங்கள் தம் குஞ்சுகளுக்கு உணவாகத் தரும் நிலை அமைந்த கொடிய காடு பாலைக் காடு ஆகும்.

தளிர்கள் இல்லாத யா மரக்கிளையில் ஒலி செய்து பறக்கும் சில் வண்டுகளை உணவாகக் கொள்ளும் ஆண் பருந்து தன் பெடையைத் தன்னுடன் வருமாறு இனிமையுடன் அழைக்கும் காட்டுவழி பாலை வழியாகும். காலால் நடந்து செல்லும்போது உளி போலக் குத்தும் கூரிய கற்களை உடையதுமாகும். காட்டு வழியில் மூங்கில்கள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து தேய்வதால் மூங்கில் சொரியும் தீப்பொறிகள் அங்குக் கீழே விழுந்துள்ள சருகுகள் மறையும்படி தீப்பற்றி எழுந்து ஊகம் புல்லின் பகுதிகளையும் எரியில் உண்டாக்கிக் காற்று பரவும் இடமெல்லாம் பறந்து எரிந்தது. அதைக்கண்டு அலறி அழும் வணிகக் கூட்டம் பயந்து ஓடியதாக அகநானூற்றுப் பாடல் (39) தெளிவுபடுத்துகின்றது. நிழல் இல்லாத பாலை நிலத்தில் உள்ள வல்லூறு என்னும் பறவையால் அலைகழிக்கப் பெற்ற காடை என்னும் பறவையானது தான் தங்கியிருந்த இருப்பிடத்தை விட்டு நீங்கிப் பாழடைந்த மன்றங்களில் வழிப்பறிக் கள்வர்கள் வழிச் செல்வோரை எதிர் பார்த்து தங்கியிருக்கவும், மக்கள் வாழ முடியாத அச்சத்தால் குடிபெயர்ந்து போனதால் பாழ்பட்டு போன மனைகளும் காணப்படுகின்றன.

**வலிமையிழந்த விலங்குகள்**

தந்தங்களை உடைய வலிமை மிக்க ஆண் யானைக் கூட்டங்களை உடைய, நீண்ட மரச் சோலையில் அணில்கள் தங்களுக்குள் இன்புற்று விளையாடுவதற்கு ஏற்ற மூங்கில்கள் வளர்ந்தது பாலை நிலமாகும். அம்பால் கொலை செய்யப்பட்டுக் கிடக்கும் இறந்தவர்களின் உடலைத் தழையால் மூடிய கற்குவியல்களைக் கொண்ட, எவரும் போவதற்கு அஞ்சும் பாலைநில வழி(அகம்.109) என்று புலவர்கள் பாடியுள்ளதை அறிய முடிகிறது. வலிமையான விலங்குகள் உணவும், நீரும், இளைப்பாற நிழலும் இல்லாத காரணத்தால் தங்கள் வலிமையிழந்து காணப்படுகின்றன.

உருவத்தில் பெரியதான யானைகள் தன் துணையின் பசியைப் போக்க யா மரப் பட்டைகளை உரித்துக் கொடுக்கிறது. நீர்நிலைக்கருகில் வாழ எண்ணும் விலங்களில் யானைகளுக்கு முதலிடம் உண்டு. ஆனால் பாலையில் நீரின்மை காரணமாக கானல் நீரை

தண்ணீர் என்று கருதி விலங்குகள் ஓடுகின்ற அவலமும் காணப்படுகின்றது. வலிமையில் உயர்ந்த விலங்கு என்ற பெருமையுடைய புலிகள் பாலை நில விலங்குகளில் ஒன்றாகும். அது பாலை நிலத்தில் தன் வலிமையிழந்து வழிப் போக்கர்களைக் கொல்லும் பொருட்டு புதர்களிலும், குன்றுகளிலும் காத்திருக்கும் நிலையை உடையது பாலை நிலம்.

செந்நாய்கள் கூட்டமாக வேட்டையாடும் திறமுடையதாகும். கூட்டமாகச் சென்று புலியைக் கொன்றுவிடும் அளவிற்கு வீரம் பொருந்திய விலங்காக இலக்கியங்களில் பாடப்பட்டுள்ளது. ஆயினும் பாலை நில வெம்மையின் காரணமாக உடல்வாடி, களைப்புற்று காணப்படும் நிலைக்கு செந்நாய்கள் தள்ளப்பட்டுள்ளன. வழிப் போக்கர்களைக் கொல்லும் பொருட்டு, பிற விலங்குகள் கொன்று உண்ட மிச்சமிருக்கும் மாமிசத்தை உண்டும் இவ்விலங்குகள் வாழ்ந்து வருகின்றன. நாளுக்கு நாள் பசியால் வருந்தும் யானைகள் தண்ணீர் தேடி அலைகின்றன. ஒரு குட்டையில் கிடந்த சிறிது நீரை பங்கிட்டுக் குடித்ததாக இளநாகனார் குறிப்பிட்டுள்ளார். யானைகளின் அழகு அழிவதற்கு இடமான குன்றத்தைக் கடந்து சென்று பொருள் ஈட்ட வேண்டுமா என்ற நோக்கில் தலைவன் எண்ணுவதும் (அகம்.123) இங்கு நோக்கத்தக்கது. பாலை நிலத்தில் பாறையைச் சார்ந்த பழைய சிதைந்த குடிசையில் பானையில் தழைத்து வளர்த்த பருத்திச் செடியின் இளங்காயை ஆண் பறவைகள் தம் பேடைகளை உண்ணச் செய்கின்றன. இச் செய்தியின் வாயிலாக பறவைகளின் துயரத்தை அறிய முடிகிறது.

துன்பத்தினும் தன்துணைப் பிரியாத் தன்;மை

எந்த வறுமையிலும் தலைவனும் தலைவியும் இணைந்தே வாழ்தல் வேண்டும் என்ற கொள்கையினை பாலை நில விலங்குகளும் பறவைகளும் உணர்த்துகின்றன. ஏனெனில் நீரின்றி, நிழலின்றி, உணவின்றி உயிரினங்கள் வருந்திய நிலையை பாலை நிலத் திணை முழுவதிலும் காண இயலுகிறது. ஆனால் எந்த ஒரு விலங்கும் தன் துணையை விட்டுப் பிரிந்ததாக ஒரு பாடலும் இல்லை என அறுதியிட்டுச் சொல்லலாம். தான் உண்ணாமலும் தன் துணைக்கும், தன் சுற்றத்தாருக்கும் மரப்பட்டைகளை உரித்து உண்ணக் கொடுத்த யானைக் கூட்டங்களைக் காண முடிகிறது. குட்டையில் இருந்த கொஞ்ச நீரையும் தான் பருகாமல் தன் பிணைமானை அருந்தச் செய்தது சங்கப் பாடல்கள் வழி அறிய முடிகிறது. குட்டியை ஈன்ற தன் துணையின் பசியைப் போக்க வழிப் போக்கர்களைக் கொல்ல புலிகளும் செந்நாய்களும் காத்திருந்த திறமும் வியப்படைய வைக்கின்றன. இதனை,

**ஒழியச் சென்மார், செல்ப' என்று நாம்**
**அழிபடர் உழக்கும் அவல நெஞ்சத்து**
**எவ்வம் இகழ்ந்துசேண் அகல, வைஎயிற்று,**
**ஊன்நசைஇப் பிணவின் உறுபசி களைஇயர்,**
**காடுதேர் மடப்பிணை அலற, கலையின்**
**ஓடுகுரங்கு அறுத்த செந்நாய் ஏற்றை**

மலர் - 2, இதழ் - 1, கார்த்திகை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**வெயில்புலந்து இளைக்கும் வெம்மைய, பயில்வரி**
**இரும்புலி வேங்கைக் கருந்தோல் அன்ன (அகம்., 285:1-8)**

என்ற பாடலடிகள் வாயிலாக அறியலாம்.

**முடிவுரை**

"அச்சுறுத்தும் பாலை நிலம்" என்ற இக்கட்டுரையில் பாலை நிலத்தின் தன்மை, பாலை நிலம் உருவாகும் விதம், பாலை நில வெப்பத்தால் உயிரினங்கள் படும் துயரம், விலங்கினங்கள் உணவின்றி தவிக்கும் நிலை ஆகியவை அறியப்படுகிறது. இத்தகைய சூழலில் பாலை நில வழிப்போக்கர்களுக்கு விலங்கினங்களால் அச்சம் உண்டாகும் நிலையும் ஏற்படுகிறது. மேலும் பாலை நில எயினர்கள் பொருளுக்காக வழிப்போக்கர்களைக் கொன்று குவித்த பிணங்கள் யானைகளுக்கு நிழலாக அமைந்தது என்று கூறப்பட்டுவதன் வாயிலாக கொலைத் தொழில் அதிக அளவில் நடந்துள்ளதும் அறிய முடிகிறது. எந்நிலையிலும் தன் துணை நீங்காத் தன்மை விலங்குகளிடையே இருந்த திறமும் இதனை உவமையாக்கித் தலைவனும் தலைவியை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டும் என்று கூற வந்திருப்பதும் புலனாகிறது. மேற்கண்ட கருத்துக்கள் யாவும் சங்க இலக்கியப் பாலை நிலப் பாடல்கள் வழி விளக்கப்பட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

**துணைநூற் பட்டியல்**

[1] இளம்பூரணர் உரை. *தொல்காப்பியம், பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை-600005, 2005.

[2] ச.வே.சுப்பிரமணியன். *சங்க இலக்கியம். எட்டுத்தொகை மூலமும் உரையும்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600108, 2010.

[3] வ.சுப.மாணிக்கம். *தமிழ்க்காதல்.* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்-608001, 2005.

[4] கா.சு.பிள்ளை. *பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பிய பொருளதிகார கருத்து, முப்பொருள் விளக்கம்.* பதிப்பு – 2006.

[5] சி.பாலசுப்பிரமணியன். *இலக்கிய அணிகள்.* பதிப்பு – 1962.

[6] இளங்கோஅடிகள். *சிலப்பதிகாரம்.* இந்து பப்ளிஷர்ஸ், மதுரை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.